# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 03.08.2026

## முன்னிலை

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 17930/SCIC/2026**

திருமதி.ராதா கோபாலன் - மேல்முறையீட்டாளர்
எண்.7, முதல் குறுக்கு தெரு
C.I.T. காலனி, மயிலாப்பூர்
சென்னை-600 004.
Phone: 99404 33391

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
செயற்பொறியாளர்
மண்டலம்-9, நுங்கம்பாக்கம்
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்.1, லேக் ஏரியா 4வது குறுக்கு தெரு
சென்னை-600 034.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **30.06.2025** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 18.08.2025 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 03.11.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 30/06/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை அவர்களுக்கு அனுப்பி, அதில் "New No.4. Old No.20A. First Cross Street, CIT Colony, Mylapore, Chennai-4, Block-0033, Survey-1595, Sub-Division-204 - regarding - certified copy of the sanctioned building plans approved for the property –If the property has undergone multiple constructions, reconstructions or renovations over time, I kindly request the approved plan for each such instance, including date of approval and validity" எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திருமதி.ராதா கோபாலன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.M.முத்தையா, செயற்பொறியாளர் (பொ), மண்டலம்-9, பெருநகர சென்னை மாநகராட்சி, நுங்கம்பாக்கம், சென்னை-34 அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 06/03/2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005-ன்படி, மனுதாரருக்கு உரிய காலவரையறையான 30 நாட்களுக்குள் தகவல்களை அளிக்காத பொதுத் தகவல் அலுவலரை ஆணையம் எச்சரிக்கிறது. இனி வருங்காலங்களில், உரிய காலவரையறையான 30 நாட்களுக்குள் தகவல்களை அளிக்கவில்லையெனில், அச்சட்டத்தின் கீழான நடவடிக்கையினை எதிர்கொள்ள நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது. பொதுத் தகவல் அலுவலர், மேற்குறிப்பிட்ட கட்டிட வரைபடத்தின் அனுமதி 10 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டது என்றும் எனவே, அப்பதிவேடுகள் தற்போது பராமரிப்பில் இல்லை எனத் தெரிவித்தார். **எனவே, பொதுத் தகவல் அலுவலர்/ செயற்பொறியாளர் (பொ), மண்டலம்-9, பெருநகர சென்னை மாநகராட்சி, நுங்கம்பாக்கம், சென்னை-34 அவர்கள் மீண்டும், கட்டிட வரைபடத்தின் நகலினை அவரது அலுவலகத்தில் தீவிரமாகத் தேடிக் கண்டுபிடித்தோ, அல்லது எந்த அலுவலகத்தில் உள்ளதோ அங்கிருந்து பெற்றோ, அதனை மனுதாரருக்கு 31/08/2026-க்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு, கட்டிட வரைபடத்தின் நகல், அவரது அலுவலகத்திலோ அல்லது வேறு எந்த அலுவலகத்திலுமோ கிடைக்கப் பெறவில்லையெனில், அது குறித்து, பிரமாணப் பத்திரம் (Sworn Affidavit) ஒன்றினை மனுதாரருக்கு அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட உத்தரவுகளுடன், இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 17930/SCIC/2026</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
செயற்பொறியாளர்
மண்டலம்-9, நுங்கம்பாக்கம்
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்.1, லேக் ஏரியா 4வது குறுக்கு தெரு
சென்னை-600 034.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திருமதி.ராதா கோபாலன்
எண்.7, முதல் குறுக்கு தெரு
C.I.T. காலனி, மயிலாப்பூர்
சென்னை-600 004.
Phone: 99404 33391

RG/Sr.PC